# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் I பரீட்சை – 2022 யூலை

## (101) நிதிக் கணக்கீடு

---

## பகுதி A

**வினா இல. 01** - 40 புள்ளிகள்

(கட்டாய வினா)

வினா இல. **1.1** தொடக்கம் **1.10**, தரப்பட்ட விடைகளிலிருந்து சரியான விடையினை தெரிவு செய்ய வேண்டப்படுகின்றது. 1.11 தொடக்கம் 1.15 வரையில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும் சரியானதா தவறானதா எனக் குறிப்பிடுமாறு வேண்டப்பட்டுள்ளது. மற்றும் 1.16 தொடக்கம் 1.20 வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை விடைப்புத்தகத்திலே உரிய வினா இலக்கத்திற்கு எதிரே எழுதுமாறு வேண்டப்பட்டுள்ளது.

பின்வருவன ஒவ்வொரு உப பிரிவிலும் மாணவர்களால் அளிக்கப்பட்ட விடைகளிலிருந்த சில பொதுவான தவறுகள் மற்றும் குறைபாடுகளாகும்:

**வினா இல. 1.1**

நிதித் தகவல்களின் தரம்சார் பண்புகள் சோதிக்கப்பட்டுள்ளது. தவறான விளங்கிக்கொள்ளல் காரணமாக சில மாணவர்கள் சரியான விடை இல.2 இற்கு பதிலாக இல.1 மற்றும் இல.4 இனை தெரிவு செய்துள்ளனர். பெரும்பாலான மாணவர்கள் சரியான விடையான இல.2 இனை தெரிவுசெய்துள்ளனர்.

**விடை இல 1.2**

வினாவானது ‘‘முதன்மைப்பதிவேடு அல்லாதது எது’’ என்பதாகும். முதன்மைப்பதிவேடு தொடர்பான குறைந்த அறிவின் காரணமாக, சில மாணவர்கள் காசேட்டிற்கு பதிலாக பொதுப்பேரேட்டினை தெரிவுசெய்துள்ளனர். இருப்பினும் பெரும்பாலான மாணவர்கள் இவ்வினாவிற்கு சரியான விடையினை தெரிவுசெய்துள்ளனர்.

**விடை இல 1.3**

நிதிக்கணக்கீட்டின் சரியான செயன்முறை இதில் கேட்கப்பட்டுள்ளது. அனைத்து மாணவர்களும் இல.3 இனை சரியான விடையாக தெரிவு செய்துள்ளனர்.

**விடை இல 1.4**

இவ் வினா வங்கிக் கணக்கிணக்க கூற்று தொடர்பான அறிவினை சோதிக்கின்றது. சில பரீட்சார்த்ததிகள் வங்கிக்கணக்கிணக்க கூற்றில் உள்ளடக்கவேண்டிய அடிப்படை தகவல்கள் தொடர்பான சரியான விளக்கத்தை கொண்டிராததால் சரியான விடை இல. 01 இற்கு பதிலாக விடை இல. 2 மற்றும் 3 இனை தெரிவுசெய்துள்ளனர். ஆனால் சரியான விடை பெரும்பாலான மாணவர்களால் தெரிவுசெய்யப்பட்டிருந்தது.

**விடை இல 1.5**

இவ்வினா வங்கிக் கடன் பெறப்பட்டதற்கான இரட்டைப்பதிவினை சோதிப்பதற்கான வினாவாகும். சில பரீட்சார்திகள் சொத்து அல்லது பொறுப்புக்களின் அதிகரிப்பு அல்லது குறைவு தொடர்பான போதிய விளக்கத்தினை கொண்டிருக்கவில்லை. ஆகவே விடை இல. 3 இற்கு பதிலாக விடை இல 1 இனை தெரிவுசெய்துள்ளனர். ஆனால் சரியான விடை பெரும்பாலான மாணவர்களால் தெரிவுசெய்யப்பட்டிருந்தது. சில மாணவர்கள் வங்கிகடன் பெறும் போது வங்கிக்கடன் கணக்கு வரவிடப்பட வேண்டும் என நினைத்துள்ளனர்.

**விடை இல 1.6**

உரிமையாளர் தனது தனியுடமை வியாபாரதத்திற்கு, மேலதிக மூலதனமாக ரூபா 1,000,000/- இனை காசாக முதலீடு செய்யும்போது கணக்கீட்டு சமன்பாட்டில் ஏற்படும் சரியான விளைவுகளை அடையாளம் காணுமாறு வேண்டப்பட்டுள்ளது. அனைத்து மாணவர்களும் சரியான விடை இல.02 இனை தெரிவுசெய்ததோடு சொத்து மற்றும் மூலதனத்தின் அதிகரிப்பினை சரியாக அடையாளம் கண்டுள்ளனர்.

**விடை இல 1.7**

கடனடிப்படையில் கொளவனவாளர் ஒருவரால் கொள்வனவு செய்யப்பட்ட பொருள்களின் திரும்பல்களுக்காக விற்பனையாளரால் பயன்படுத்தப்படும் சரியான மூல ஆவணத்தைத் தெரிவுசெய்யுமாறு வினவப்பட்டது. பெரும்பாலான மாணவர்கள் சரியான மூல ஆவணம் பற்றிய போதிய விளக்கத்தை கொண்டிருக்கவில்லை. எனவே சரியான விடை இல.4 இற்கு பதிலாக விடை இல.3 இனை தெரிவுசெய்துள்ளனர்.

**விடை இல 1.8**

தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மொத்தச் சொத்துகத்களின் பெறுமதியினை கணிப்பிடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மொத்தச் சொத்துகத்களின் பெறுமதியினை தீர்மானிப்பது தொடர்பாக போதிய அறிவின்மை காரணமாக சரியான விடை இல.3 இற்கு பதிலாக விடை இல.01 மற்றும் 04 இனை தெரிவுசெய்துள்ளனர். இது வருடத்திற்கான இலாபத்தை கூட்டி பற்றுக்களை கழித்து பின்னர் பொறுப்புக்களை மூலதனத்துடன் கூட்ட வேண்டும்.

**விடை இல 1.9**

சொத்துகளில் குறைப்பை ஏற்படுத்தும் ஊடுசெயல் எது? என வினவப்பட்டுள்ளது. சொத்துக்களின் குறைப்புக்கான இரட்டை பதிவு தொடர்பாக சரியான இரட்டைப்பதிவு பற்றிய குறைந்த அறிவின் காரணமாக விடை இல. 02 இற்கு பதிலாக விடை இல. 01 இனை தெரிவுசெய்துள்ளனர். பெரும்பாலான மாணவர்கள் சரியான விடையினை தெரிவுசெய்துள்ளனர்

**விடை இல 1.10**

தரப்பட்ட கூற்றுடன் தொடர்புடைய கணக்கீட்டு எண்ணக்கருவினை கேட்கப்பட்டுள்ளது. சில பரீட்சார்திகள் கணக்கீட்டு எண்ணக்கரு தொடர்பான சரியான விளக்கத்தை கொண்டிருக்கவில்லை. இதன்காரணமாக விடை இல. 01 இற்கு பதிலாக விடை இல.03 மற்றும் 04 இனை தெரிவு செய்துள்ளனர். பெரும்பாலான மாணவர்கள் சரியான விடையினை தெரிவுசெய்துள்ளனர். நிதிக் கூற்றுக்கள், எதிர்காலத்தில் ஒரு நிறுவனம் தொடர்ந்தும் இயங்கும் என்ற எடுகோளின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன.

**1.11** தொடக்கம் **1.15** வரையான வினாக்கள் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும் சரியானதா அல்லது தவறானதா எனக்குறிப்பிடுமாறு கேட்கப்பட்டுள்ளது. பொதுவாக அடையாளங்காணப்பட்ட பிழைகள் பின்வருமாறு.

**விடை இல 1.11**

பொதுநாட்குறிப்பேட்டில் பதிவுசெய்யப்படுகின்ற கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய போதிய அறிவின்மை காரணமாக, சில மாணவர்கள் சரி எனும் சரியான விடைக்கு பதிலாக தவறு எனக்குறிப்பிட்டுள்ளனர். இருப்பினும் பெரும்பாலான மாணவர்களால் சரியான விடை தெரிவுசெய்யப்பட்டிருந்தது.

**விடை இல 1.12**

ஒரு வணிகத்தின் அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களும் நிகழ்வுகளும் பணத்தில் அளவிடக் கூடியதாக இருப்பின் பதிவுசெய்யப்படும். தரப்பட்ட கூற்றை பற்றிய குறைவான விளக்கத்தின் காரணமாக சில மாணவர்கள் தவறு எனும் சரியான விடைக்கு பதிலாக சரி எனக் குறிப்பிட்டுள்ளனர். இருப்பினும் பெரும்பாலான மாணவர்களால் சரியான விடை தெரிவுசெய்யப்பட்டிருந்தது.

**விடை இல 1.13**

நிதிக்கூற்று பகுதியின் கூறுகள் பற்றிய குறைவான விளக்கத்தின் காரணமாக சில மாணவர்கள் தவறு எனும் சரியான விடைக்கு பதிலாக சரி எனக் குறிப்பிட்டுள்ளனர். இருப்பினும் பெரும்பாலான மாணவர்களால் சரியான விடை தெரிவுசெய்யப்பட்டிருந்தது.

**விடை இல 1.14**

கிரயம் அல்லது நிகர தேறத்தக்க பெறுமதியில் எது குறைந்ததோ அந்தப் பெறுமதியில் தொக்குகள் மதிப்பிடப்படுவது முன்னெச்சரிக்கை கணக்கீட்டு எண்ணக்கருவுக்கான ஓர் உதாரணமாகும். தரப்பட்ட கூற்றை பற்றிய குறைவான விளக்கத்தின் காரணமாக சில மாணவர்கள் தவறு எனும் சரியான விடைக்கு பதிலாக சரி எனக் குறிப்பிட்டுள்ளனர். இருப்பினும் பெரும்பாலான மாணவர்களால் சரியான விடை தெரிவுசெய்யப்பட்டிருந்தது

**விடை இல 1.15**

தரப்பட்ட கூற்றை பற்றிய குறைவான விளக்கத்தின் காரணமாக சில மாணவர்கள் தவறு எனும் சரியான விடைக்கு பதிலாக சரி எனக் குறிப்பிட்டுள்ளனர். இருப்பினும் பெரும்பாலான பரீட்சார்த்திகள் உரிமையாண்மை என்பது வருமானக் கூற்றுடன் நேரடியாகத் தொடர்புபட்ட ஒரு மூலகம் என அடையாளம் காணப்பட வில்லை.

**1.16** தொடக்கம் **1.20** வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை உங்களது விடைப்புத்தகத்திலே எழுதுமாறு வேண்டப்பட்டுள்ளீர்.

**விடை இல 1.16**

வணிக உரிமமொன்றில் பயன்படுத்தப்படும் இரண்டு (02) வகையான மூல ஆவணங்களைக் குறிப்பிடுமாறு வேண்டப்பட்டுள்ளீர். மூல ஆவணங்களை பற்றிய போதிய அறிவின்மை காரணமாக பரீட்சார்த்திகளால் பின்வரும் தவறுகள் நிகழத்தப்பட்டுள்ளன.

நிதிநிலைக் கூற்று – காசுப் பற்றுச்சீட்டுக்கான நாட்குறிப்பேடு

கொள்வனவு/ விற்பனைக்கான நாட்குறிப்பேடு – பொதுக் குறிப்பேடு.

**விடை இல 1.17**

வணிக ஒழுக்கநெறி ஏன் முக்கியமானது என்பதற்கான இரண்டு காரணங்கள் சோதிக்கப்பட்டுள்ளது. வணிக ஒழுக்கநெறி பற்றிய போதிய அறிவின்மை காரணமாக, பெரும்பாலான பரீட்சார்த்திகள் விடைகளை எழுதவில்லை.

**விடை இல 1.18**

செலவு எனும் பதத்தை வரைவிலக்கணப்படுத்துமாறு வேண்டப்பட்டுள்ளது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் பூரணமான விடைகளை எழுதவில்லை. வழங்கப்பட்ட விடைகள் பூரணப்படுத்தப்படவில்லை. ஒரு சில பரீட்சார்திகளால் சரியான வரைவிலக்கணம் கொடுக்கப்பட்டிருந்தது.

**விடை இல 1.19**

பொதுக் கணக்கீட்டு மென்பொருளுக்கான இரண்டு உதாரணங்களைக் குறிப்பிடுமாறு வேண்டப்பட்டுள்ளது. பெரும்பாலான மாணவர்களால் சரியான விடை தெரிவுசெய்யப்பட்டிருந்தது மற்றும் ஒருசிலர் சரியான விடைகளை வழங்கவில்லை.

**விடை இல 1.20**

2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தேய்மானக் கட்டணத்தைக் குறைந்து செல்லும் மீதி முறையைப் பயன்படுத்தி கணிப்பிட வேண்டும். வேறுபட்ட கணிப்பீட்டு தவறுகளினால் சரியான விடையான ரூ. 128,000 வழங்கப்படவில்லை.

## <u>பகுதி B</u>

**வினா இல. 02** - 10 புள்ளிகள்
(கட்டாய வினா)

இவ்வினா **(A)** மற்றும் **(B)** என இரு உபபிரிவுகளை கொண்டுள்ளது. பகுதி **(A)** இல் கணக்கீட்டு சமன்பாடு பற்றிய மாணவர்களின் அறிவினையும் பகுதி **(B)** இல் சீராக்கப்பட்ட காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கினை பயன்படுத்தி 2022 மாரச் 31 இலான வங்கிக்கணக்கிணக்க கூற்றினை தயாரிப்பதையும் சோதிக்கப்பட்டுள்ளது. பரீட்சார்த்திகளின் செயல்திறன் திருப்திகரமான மட்டத்தில் உள்ளது.

**பகுதி – A**

கணக்கீட்டு சமன்பாட்டுடன் தொடர்புடைய பெரும்பாலான நடவடிக்கைள் மாணவர்களால் சரியாக இனங்காணப்பட்டுள்ளது. ஆனால் சில பரீட்சார்த்திகளால் சமன்பாடு 01 வணிகத்தில் காசினை முதலீடு செய்வதற்கான ஊடுசெயலை சரியாக இனங்காண முடியவில்லை. மேலும் கணக்கீட்டு சமன்பாட்டு இல. 04 இற்கான ஊடுசெயல் கடன்விற்பனை ஆகும். இது ரூ.65,000 பெறுமதியான இருப்பு கிரயம் ரூ. 80,000 இற்கு கடனடிப்படையில் விற்பனை செய்யப்பட்டது என திருத்தப்பட வேண்டும்.

**பகுதி - B**

**(a)** சீராக்கப்பட்ட காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கினை தயாரிக்கும் பொழுது மாணவர்களால் வழங்கப்பட்ட விடைகளில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்க முடிந்தது.

(1) காசுப்புத்தகத்தில் மட்டும் சீராக்கக்கூடிய ஊடுசெயல்களை கவனத்தில் கொள்ளாது அனைத்து ஊடுசெயல்களும் காசுப்புத்தகத்தில் சீராக்கப்பட்டுள்ளன.

(2) கணக்கில் செலவிலிடக்கூடிய ஊடுசெயல்களை வரவிலும் வரவில் பதியவேண்டிய ஊடுசெயல்களை செலவிலும் பதிந்துள்ளமை.

(3) காசுக்கட்டுப்பாட்டுக்கணக்கின் ஆரம்ப மீதியானது வரவில் பதிய வேண்டியிருப்பினும் சில பரீட்சார்த்திகளால் செலவிடப்பட வேண்டும்.

(4) காசுக்கணக்கின் ஆரம்பமீதி காசுப்புத்தகத்ததிற்குள் கொண்டுவரப்படவில்லை.

(5) காசுப்புத்தகத்தின் இறுதி மீதியானது சரியாக சமப்படுத்தப்படவில்லை மற்றும் இறுதிமீதி எடுக்கப்படவில்லை.

**(b)** வங்கிக் கணக்கிணக்க கூற்றினை தயாரிப்பதில் பரீட்சார்திகளால் வழங்கப்பட்ட விடைகளில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்க முடிந்தது.:

(1) வங்கி கணக்கிணக்க கூற்றில் மட்டும் உள்ளடக்கக்கூடிய நடவடிக்கைகளை அடையாளம் காணாது அனைத்து நடவடிக்கைகளையும் வங்கிக் கணக்கிணக்க கூற்றில் சீராக்கப்பட்டுள்ளது.

**(2)** சில பரீட்சார்த்திகள் வங்கிக் கணக்கிணக்க கூற்றினை சீராக்கப்பட்ட காசேட்டிலிருந்து ஆரம்பித்து வங்கிக்கூற்று மீதியினை பெற்றிருந்த போதிலும், ஏனைய சிலர் வங்கிக்கூற்று மீதியிலிருந்து வங்கிக் கணக்கிணக்க கூற்றினை ஆரம்பித்து சீராக்கப்பட்ட காசேட்டு மீதிக்கு கொண்டுவந்துள்ளனர். இவ்விரு சந்தர்ப்பங்களிலும் சில மாணவர்கள் கூட்டப்பட வேண்டிய விடயங்களை கழித்தும் கழிக்கப்பட வேண்டிய விடயங்களை கூட்டியும் தயாரித்துள்ளனர்.

**வினா இல. 03** - 10 புள்ளிகள்
(கட்டாய வினா)

2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆணடிற்கான உற்பத்திக் கிரயக் கூற்று தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவு மற்றும் விளக்கத்தை சோதிப்பதை நோக்காக கொண்ட வினாவாகும்.

பெரும்பாலான மாணவர்கள் திருப்திகரமான மட்டத்தில் விடையளித்துள்ளனர் மற்றும் பின்வரும் குறைபாடுகள் பரீட்சகரால் அவதானிக்க முடிந்தது.

(1) சரியான கட்டமைப்பில் விடைகள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படவில்லை.

(2) செயற்பாட்டிலுள்ள மூலப்பொருள் மூலக்கிரயத்துடன் சீராக்கப்படாது இறுதிக்கிரயத்துடன் சீராக்கப்பட்டிருந்தமை.

(3) நேர்கூலிகள் நேரடி செலவுகளின் கீழ் சீராக்கப்பட வேண்டியிருப்பினும் சில பரீட்சார்திகள் அவற்றை மேந்தலைக் கிரயமாக காட்டியிருந்தனர்

(4) தொழிற்சாலை மற்றும் அலுவலகங்களுக்கிடையிலான கிரய ஒதுக்கீட்டிற்கான மேந்தலைக் கணிப்பீடு கொடுக்கப்பட்ட வீதாசாரத்திற்கமைய சரியாக கணிப்பிடப்படவில்லை.

(5) ஆரம்ப மூலப்பொருள் மற்றும் இறுதி மூலப்பொருள் தவறாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

(6) தொழிற்சாலை ஊழியர்களுக்கான ரூ.250,000 ஊக்கத்தொகை நேர்ச்செலவுகளின் கீழ் சீராக்கப்படவில்லை. சில பரீட்சார்த்திகள் இதை மேந்தலைச் செலவாக கருதியுள்ளனர்.

(7) உற்பத்திக் கிரயத்தின் மீதான 20% இலாப வீதம் கணிப்பிடப்படவில்லை.

(8) ‘‘மூலப்பொருள் நுகர்வு’’, ‘‘மூலக்கிரயம்’’ மற்றும் ‘‘மொத்த உற்பத்திக் கிரயம்’’ போன்ற பதங்கள் கணிப்பிடப்பட்ட பெறுமதிக்கெதிராக எழுதப்படவில்லை.

**வினா இல. 04** - 10 புள்ளிகள்
(கட்டாய வினா)

பேரேட்டு மீதிகளை தயாரித்து அதனை கொண்டு பரீட்சை மீதியினை தயாரிப்பது தொடர்பான மாணவர்களின் அறிவினை இவ்வினாவில் சோதிக்கப்பட்டுள்ளது. பரீட்சார்த்திகளின் செயல்திறன் திருப்பதிகரமான மட்டத்தில் உள்ளது.

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்க முடிந்தது:

(1) சில பரீட்சார்த்திகள் பரீட்சை மீதியனை தயாரிப்பதற்கு பதிலாக பேரேடுகளை மாத்திரம் தயாரித்துள்ளனர்.

(2) பரீட்சை மீதியில் வரவில் பதியவேண்டியவை செலவிலும் செலவில் பதியவேண்டியவை வரவிலும் காட்டப்பட்டுள்ளது.

(3) கடன் விற்பனை மற்றும் கடன் கொள்வனவுகள் கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கினூடாக சரியாக கணிப்பிடப்படவில்லை.

(4) செலுத்தவேண்டிய மின்சாரம் மற்றும் நீர் செலவுகள் தொடர்புடைய செலவுக்கணக்குகளில் சரியாக சீராக்கம் செய்யப்படவில்லை.

(5) காசு விற்பனை, கடன் விற்பனை, கடன் கொள்வனவு மற்றும் காசுக் கொள்வனவு என்பன தனித்தனி விடயங்களாக பதிவுசெய்யப்பட்டுள்ளன.

(6) 2021 ஒக்டோபர் 01ம் திகதி கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரங்கள் மீது நேர்கோட்டு அடிப்படையில் கிரயத்தில் ஆண்டிற்கு 20% இல் பெறுமானத்தேய்வு சரியாக கணிப்பிடப்படவில்லை.

(7) இயந்திரங்களுக்காக கணிப்பிடப்பட்ட பெறுமானத் தேய்வு இயந்திர பெறுமதியிலிருந்து கழித்து தேறிய பெறுமதி பரீட்சைமீதியில் காட்டப்பட்டுள்ளது.

**வினா இல. 05** - 10 புள்ளிகள்
(கட்டாய வினா)

இவ்வினா **(a)** மற்றும் **(b)** என இரு பகுதிகளைக் கொண்டது. பகுதி **(a)** இல் வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவுகளையும் பகுதி **(b)** இல் தொங்கல் கணக்கினை தயாரிப்பதற்கும் வேண்டப்பட்டுள்ளது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்துள்ளனர்.

பின்வரும் குறைபாடுகளும் தவறுகளும் அவதானிக்கப்பட்டிருந்தன:

**(a) பொது நாட்குறிப்புகளை தயாரித்தல்.**

(1) சிலர் நாட்குறிப்பு பதிவுகளுக்கு பதிலாக பேரேட்டு கணக்குகளை தயாரித்துள்ளனர்.

(2) நாட்குறிப்புப் பதிவினை எழுதும் போது நாட்குறிப்புப் பதிவு தொடர்பான வரவு மற்றும் செலவுப் பெறுமதிகள் மாற்றம் செய்யப்பட்டள்ளன.

(3) நாட்குறிப்புப் பதிவுகளை எழுதும் போது வரவு மற்றும் செலவு என்பன ஊடுசெயல்களுக்கெதிராக குறிப்பிடப்படவில்லை.

(4) அடையாளங்காணப்படாத வழுக்கள் தொங்கல் கணக்கினூடாக திருத்தப்பட்டிருந்தமை

(5) பெரும்பாலான பரீட்சார்த்திகள் வட்டி வருமானக் கணக்கிற்கான விடய இல.05 இன் படி மேலதிகப்பற்று வட்டி ரூ.21,500 செலவிலிடப்பட்டது தொடர்பாக சரியான விளக்கமின்மையால் தவறான விடைகளை வழங்கியுள்ளனர்.

**(b)** 31 மார்ச் 2022 இல் முடிவடைந்த ஆண்டுக்கான சீராக்கப்பட்ட தேறிய இலாபக் கணிப்பீட்டில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

(1) தொங்கல் கணக்கின் ஆரம்ப செலவு மீதியானது வரவுப்பக்கத்தில் பதியப்பட்டிருந்தமை மற்றும் தொங்கல்கணக்கின் செலவு மீதி பதியப்படாமலும் இருந்தது.

(2) தொங்கல் கணக்கில் வரவிடப்படவேண்டிய பதிவுகள் செலவில் பதியப்பட்டிருந்தன.

## <u>பகுதி C</u>

**வினா இல. 06** - 20 புள்ளிகள்

(கட்டாய வினா)

இவ்வினா **(a)** மற்றும் **(b)** என இரு பகுதிகளைக் கொண்டது. பகுதி **(a)** இல் முற்றடக்கவருமானக் கூற்றினை தயாரிப்பதில் மாணவர்கள் கொண்டுள்ள அறிவினையும் பகுதி **(b)** இல் நிதிநிலைக் கூற்றினை தயாரிப்பது தொடர்பாக சோதிக்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்த செயல்திறன் திருப்திகரமாகவுள்ளது.

பொதுவாக அவதானிக்கப்பட்ட தவறுகள் மற்றும் குறைபாடுகள் பின்வருமாறு:

**(a) முற்றடக்க வருமானக் கூற்றினை முன்னிலைப்படுத்தல்:**

(1) வருடத்திற்கான சரியான பெறுமானத்தேய்வுப் பெறுமதி கணிப்பிடப்பட்டு வருமானக் கூற்றில் பதியப்படவில்லை

(2) செலுத்தவேண்டிய மின்சாரம் மற்றும் முற்செலுத்தப்பட்ட அலுவலக வாடகை என்பன வருடத்திற்கான செலவினைக் கணிப்பிடும்போது கருத்தில் கொள்ளப்படவில்லை.

(3) முற்றடக்க வருமானக் கூற்றில் காட்டப்படவேண்டிய விடயங்கள் தொடர்பான குறைந்த விளக்கத்தின் காரணமாக நிதிநிலைக் கூற்றில் காட்டப்பட வேண்டிய சில விடயங்கள் முற்றடக்க வருமானக் கூற்றில் காட்டப்பட்டுள்ளன.

(4) வருடத்திற்காக பதிவழிக்கப்பட்ட ஐயக்கடன் ரூ. 200,000 பதிவுசெய்யப்படவில்லை.

(5) மொத்த இலாபத்தை கணிப்பிடும் போது சில பரீட்சார்த்திகள், ஆரம்ப இருப்பினைக் கழித்து இறுதி இருப்பினை கூட்டியுள்ளனர்.

(6) முற்றடக்க வருமானக் கூற்றில் பரீட்சை மீதியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை ஆயிரத்திலும் சீராக்கங்களுடன் தொடர்புடைய விடையங்களை சாதாரண இலக்கங்களிலும் பதிவுசெய்துள்ளனர்.

(7) 2021 ஏப்ரல் 01ம் திகதி வணிகத்துக்கு ரூ.1,000,000 இற்கு மாற்றப்பட்ட மோட்டார் லொறியின் மீதான வருடாந்த தேய்மானம் 25% இல் சரியாக கணிப்பிடப்பட்டு வருமானக் கூற்றிற்கு கொண்டுசெல்லப்படவில்லை.

(8) புரிந்துரைக்கப்பட்ட கட்டமைப்பில் முற்றடக்க வருமானக் கூற்று முன்னிலைப்படுத்தப்படவில்லை.

(9) 31 மார்ச் 2022 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வணிகத்தின் பெயருடன் முற்றடக்க வருமானக் கூற்று எனும் பதம் குறிப்பிடப்படவில்லை.

**(b) நிதிநிலைக் கூற்றினை தயாரித்தல்:**

(1) நிதிநிலைக் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பான அடிப்படை அறிவு குறைபாட்டின் காரணமாக, கொள்வனவு, விற்பனை, ஆரம்ப இருப்பு, வாடகை வருமானம், ஏனைய செலவுகள் என்பன நிதிநிலைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(2) செலுத்தவேண்டிய மின்சாரம் மற்றும் முற்செலுத்தப்பட்ட அலுவலக வாடகை என்பன நடைமுறைச் சொத்து மற்றும் நடைமுறைப் பொறுப்பாக நிதிநிலைக் கூற்றில் உள்ளடக்கப்படவில்லை.

(3) வருடத்திற்கான ஐயக்கடன் ரூ. 200,000 வியாபார வருமதிகளிலிருந்து சரியாக பதிவழிக்கப்படவில்லை

(4) 2021 ஏப்ரல் 01ம் திகதி வணிகத்துக்கு ரூ.1,000,000 இற்கு மாற்றப்பட்ட மோட்டார் லொறி நிதிநிலைக் கூற்றில் மோட்டார் வாகனங்களின் கீழ் உள்ளடக்கப்படவில்லை.

(5) வருடத்திற்கான பெறுமானத் தேய்வு திரண்ட தேய்மானத்திற்கு பதிலாக நிதிநிலைக் கூற்றில் காட்டப்பட்டுள்ளது.

(6) சில பரீட்சார்த்திகள் நிதிநிலைக் கூற்றிலுள்ள விடையங்களை வகைப்படுத்தி காட்டாது அனைத்து விடையங்களையும் ஒன்றாக காட்டியுள்ளனர்.

உதாரணம் - நடைமுறையல்லா சொத்து, நடைமுறைச்சொத்து, உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள், நடைமுறைப் பொறுப்புக்கள், ஏனையவை.

(7) வியாபார வருமதிகள் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழும் வியாபார சென்மதிகள் நடைமுறைச் சொத்துக்களின் கீழும் காட்டப்பட்டுள்ளன.

(8) ஏப்ரல் மற்றும் மே 2022 இற்காக முற்செலுத்தப்பட்ட அலுவலக வாடகை சரியாகக் கணிப்பிடப்பட்டு நிதிநிலைக் கூற்றில் நடைமுறைச் சொத்தாக காட்டப்படவில்லை.

\- - -

**பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை மட்டத்தை மேம்படுத்துவதற்கு கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய பொதுவான விடயங்கள்:**

**(1)** புதிய பாடத்திட்டத்தை முழுமையாகவும் ஆழமாகவும் படிக்கவும். புதிய பாட விடயங்கள் மீது கூடிய கவனம் செலுத்தவும்.

**(2)** வினாவைப் பல தடவைகள் வாசித்து வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடை அளிக்கவும். தேவையற்ற விடயங்களை எழுத வேண்டாம்.

**(3)** இப்பாடத்துடன் தொடர்புடைய புத்தகங்கள், கையேடுகள், மடல்கள், நாட்குறிப்பேடுகளைப் படிக்கவும்.

**(4)** அடிப்படைக் கோட்பாட்டு எண்ணக்கருக்களைச் சரியாக இனங்காண்பதுடன் வினாக்களுக்கு விடையளிப்பதற்குத் தேவையான திறன்களையும் வளர்த்துக் கொள்ளவும்.

**(5)** கையெழுத்து தெளிவாக இருக்க வேண்டும் என்பதுடன் வினா இலக்கங்களும் சரியாக எழுதப்பட்டிருக்க வேண்டும்.

**(6)** வினாத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதுடன் கணிப்பீடுகளையும் செய்முறைகளையும் சரியாக வெளிப்படுத்தவும்.

**(7)** அதிகளவான கடந்தகால வினாத்தாள்களில் பயிற்சி பெறுவதன் மூலம் அறிவை மேம்படுத்திக் கொள்ளவும்.

**(8)** உங்களது நேரத்தை வினைத்திறனாகப் பயன்படுத்தவும்.

**(9)** விடைத்தாள்களைக் கையளிப்பதற்கு முன்னர், வினா இலக்கங்கள் போன்றவை சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளனவா என்பதைப் பரீட்சிக்கவும்.

**(10)** சிறந்த தயார்நிலையுடனும் பரீட்சையில் சித்தியடையும் முனைப்புடனும் பரீட்சைக்குத் தோற்றவும்.

- * * * -